<u>கொடைக்கானல் நகராட்சி</u>

1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், அட்டவணை III–ன் பிரிவு 2–ன் கீழ் 30.01.2023ஆம் நாள் திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும். அது சமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/– பா.செல்லத்துரை,
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

நாள். 25.01.2023

**பொருள் எண் – 1)**

கொடைக்கானல் நகராட்சி எல்லைக்குள் நுழையும் வாகனங்களுக்கு சுங்க வசூல் செய்யும் உரிமக் காலம் 15.06.2016 முதல் 14.06.2019 வரை மூன்று ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்திடவும், சுங்க கட்டண வசூலினை முன்னாள் படைவீரர்கள் மூலம் மேற்கொள்ளவும் அரசாணை எண். (டி) 136, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறை முகங்கள் (எச்.எஸ்.1) துறை, நாள்.01.07.2016.மூலம் அனுமதி வழங்கப்பட்டது.

கொடைக்கானல் நகராட்சி பகுதிக்குள் நுழையும் வாகனங்களுக்கு சுங்க வசூல் செய்யும் பொருட்டு 15.06.2019 முதல் 14.06.2022 வரை மூன்று ஆண்டு காலத்திற்கு அரசாணையின்றி பழைய கட்டணம் வசூல் செய்யப்பட்டதற்கு பின்னேற்பு ஆணை வழங்கிடவும், 15.06.2022 முதல் 14.06.2024 வரை இரண்டு ஆண்டு காலத்திற்கு உயர்த்தப்பட்ட கட்டணம் வசூலிக்கவும் கொடைக்கானல் தாலுகாவுக்கு உட்பட்ட அனைத்து வகையான வாகனங்களுக்கும் சுங்கக் கட்டணம் செலுத்துவதிலிருந்து கொடைக்கானல் நகராட்சி அனுமதி பெற்று விலக்களிக்க அனுமதி வழங்கிடக் கோரி அரசாணை வெளியிட ஆவண செய்யுமாறு மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து, அரசாணை (டி) எண்.12, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.எஸ்.1) துறை, நாள்.23.01.2023 மூலம் சுங்கச் சாவடியில் நுழையும் வாகனங்களுக்கு 15.06.2019 முதல் 22.01.2023 வரை அரசாணையின்றி பழைய கட்டணம் வசூல் செய்யப்பட்டதற்கு பின்னேற்பும், 23.01.2023 முதல் 14.06.2024 வரை கீழ்கண்டவாறு உயர்த்தப்பட்ட கட்டணம் வசூலிக்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

| வ. எண் | வாகன வகை | அரசாணை எண்.(டி) எண்.136, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.எஸ்.1) துறை, நாள்.01.07.2016ன்படி பழைய சுங்கக் கட்டணம். | உயர்த்தப்பட்டுள்ள சுங்கக் கட்டணம் |
|---|---|---|---|
| 1 | சுற்றுலாப் பேருந்து | 200 | 250 |
| 2 | பேருந்து | 100 | 150 |
| 3 | லாரி (கனரக வாகனங்கள்) | 80 | 100 |
| 4 | மேக்ஸிகேப் (வேன், மினி லாரி, டிராக்டர்) | 70 | 80 |
| 5 | சுற்றுலா சீறுந்து, வாடகை சிற்றுந்து (சுமோ, குவாலிஸ் மற்றும் டிராக்ஸ் உட்பட) | 50 | 60 |
| 6 | சீறுந்து அல்லது ஈப்பு | 50 | 60 |
| 7 | மூன்று சக்கர வாகனங்கள் / இரண்டு சக்கர வாகனங்கள் | இல்லை | இல்லை |

மேலும், கொடைக்கானல் தாலுக்காவிற்குட்பட்ட அனைத்து வகையான வாகனங்களுக்கும் சுங்கக் கட்டணம் செலுத்துவதிலிருந்து கொடைக்கானல் நகராட்சி அனுமதி பெற்று விலக்களிக்கலாம் என ஆணையிடப்பட்டுள்ள அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.
2.கொடைக்கானல் தாலுகாவிற்குட்பட்ட அனைத்து வகையான வாகனங்களுக்கும் விலக்கு பெற நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2580/2004/அ3)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **297, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 2)**

கொடைக்கானல் நகராட்சி, பொது சுகாதாரம் தூய்மை இந்தியா திட்டம் (2.0) உள்ளாட்சிகளின் பயன்பாட்டில் உள்ள பொது மற்றும் சமுதாய கழிப்பறைகள் பயன்படுத்துவோரின் கருத்தை தெரிவிக்க QR CODE பதிப்பதற்கு 23.12.2022 விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ. எண் | விலைப்புள்ளி கோரியவர்கள் விபரம் | விபரம் | QR CODE பைபர் சீட்டு பொறுத்துவதற்கு ஒன்றுக்கு விலை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | FUTURA DIGITAL Communication Anna salai. Kodaikanal | 20 செ.மீ அகலம் X 30 செ.மீ நீளம் அளவில் (A4) 150 GSM–ல் ஊதா நிறத்தில் QR CODE<br><br>வெளிப்புறத்தில் 5 மி.மீ தடிமனில் 26 செ,மீ X 42 செ.மீ அளவில் பைபர் சீட். | ரூ. 2100/– |
| 2 | Annai. Offset & Fles Bazzaar Street, Batlagundu–624101 | | ரூ.2300/– |
| 3 | S.R.Digital Print Deppo, Near BSNL, Kodaikanal. | | ரூ.2200/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள FUTURA DIGITAL Communication Anna salai. Kodaikanal, நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தூய்மை இந்தியா திட்டம் (2.0) அவசரம் அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1619/2022/எச்.1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **298, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 3)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரம் தூய்மை இந்தியா திட்டம் (2.0) உள்ளாட்சிகளின் பயன்பாட்டில் உள்ள பொது மற்றும் சமுதாய கழிப்பறைகள் பயன்படுத்துவோரின் கருத்தை தெரிவிக்க QR CODE பொருத்துதல் சம்மந்தமாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அலுவலகத்தில் இருந்து வரப்பெற்ற கடிதம் எண்: 31420/2022/தூ.இ.தி.2.0. நாள். 17.11.2022 மற்றும் அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் அறிவுறையின் படி கீழ்கண்ட அளவு மற்றும் விவரக்குறிப்புடன்,

- 20 செ.மீ அகலம் X 30 செ.மீ நீளம் அளவில் (A4) 150 GSM–ல் ஊதா நிறத்தில் QR CODE
- வெளிப்புறத்தில் 5 மி.மீ தடிமனில் 26 செ,மீ X 42 செ.மீ அளவில் பைபர் சீட்.

மேற்கண்ட அளவில் அனைத்து உபயோகத்தில் உள்ள பொது மற்றும் சமுதாய கழிப்பறைகளின் வெளிப்புறத்தில் QR CODE பொறுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்கண்ட QR CODE பைபர் சீட்டில் பொருத்துவதற்கு ஒன்றுக்கு ரூ.2100/– ஆகும். கொடைக்கானல் நகராட்சி 24 வார்டு பகுதியில் 40 எண்ணிக்கையில் பொது மற்றும் சமுதாய கழிப்பிடம் உள்ளது. அதன் படி 40 எண்ணிக்கையில் QR CODE பதிப்பதற்கு உத்தேச செலவினம் ரூ.84000/–(ரூபாய் என்பத்து நான்காயிரம் மட்டும்) ஆகும். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்க்கும், விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தூய்மை இந்தியா திட்டம் (2.0) பணிகளின் அவசரம் அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1619/2022/எச்.1)

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **299, நாள். 30.01.2023** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 4)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும், 14 வாகனங்களுக்கு (கீழ்கண்டவாறு) 64 டயர்கள் தேவைப்படுகிறது.

| வ. எண் | வாகனங்களின் எண் | அளவு | ஒவ்வொரு வாகனத்திற்கும் டயர்களின் எண்ணிக்கை | மொத்தம் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | TN 57 AU 3862 Tipper Lorry | 8.25 x 16 | 6 | 64 டயர்கள் |
| 2 | TN 57 AU 3416 Tipper Lorry | 8.25 x 16 | 6 | |
| 3 | TN 57 W 4937 Tipper Lorry | 8.25 x 16 | 6 | |
| 4 | TN 57 W 9634 Dumper Plazer Lorry | 8.25 x 16 | 6 | |
| 5 | TN 57 BZ 9226 Bolero Pickup | 7.00 R 15 | 4 | |
| 6 | TN 57 BZ 9234 Bolero Pickup | 7.00 R 15 | 4 | |
| 7 | TN 57 BU 3216 TATA ACE | 145 R 12 | 4 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | TN 57 BU 3276 TATA ACE | 145 R 12 | 4 | |
| 9 | TN 57 BU 3280 TATA ACE | 145 R 12 | 4 | |
| 10 | TN 57 BU 3252 TATA ACE | 145 R 12 | 4 | |
| 11 | TN 57 BU 3253 TATA ACE | 145 R 12 | 4 | |
| 12 | TN 57 BU 3265 TATA ACE | 145 R 12 | 4 | |
| 13 | TN 57 BU 3224 TATA ACE | 145 R 12 | 4 | |
| 14 | TN 57 BU 3292 TATA ACE | 145 R 12 | 4 | |

மேற்கண்ட வாகனங்களுக்கு டயர்கள் வாங்கிக் கொள்வதற்கு MRF டயர் டிவிசன் அலுவலகம், திண்டுக்கல் நிறுவனத்தில் விலைப்புள்ளி 04.01.2023 அன்று கோரப்பட்டதில், அதன்படி திண்டுக்கல் MRF டயர் நிறுவனத்திடமிருந்து 09.01.2023 அன்று வரப்பட்ட விலைப்புள்ளி தொகை ரூ.434808/– (ரூபாய் நான்கு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து எண்ணூற்றி எட்டு மட்டும்). மேற்கண்ட தொகையை MRF நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரம் நலன் கருதி அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.24/2023/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **300, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 5)**

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் குடிநீர் நிதியின் மூலம் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு 14.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | அய்யர்கிணறு பகுதியில் குடிநீர் விநியோகம் செய்திட ஜி.ஐ. பிரதான குழாய்கள் அமைத்தல் | 5.94 | எம்.கென்னடி<br>ஆர். பழனி | 0.05% குறைவு<br>1.30% அதிகம் |
| 2 | தெரசாநகர் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்திட ஜி.ஐ. பிரதான குழாய்கள் அமைத்தல் | 4.97 | கே. கோபு<br>டி. ரஞ்சித்குமார் | 0.08 %குறைவு<br>2.30 %அதிகம் |
| 3 | வார்டு எண்.3 அம்பேத்கார்நகர் பகுதியில் பகிர்மான குழாய் அமைத்தல் | 3.76 | ஆர். பழனி<br>எம். கென்னடி | 0.50 % குறைவு<br>0.90%அதிகம் |
| 4 | வார்டு எண். 6 வில்பட்டி சாலையில் பகிர்மான குழாய்கள் அமைத்தல் | 3.83 | எம்.கென்னடி<br>ஆர். பழனி | 0.06 % குறைவு<br>0.71%அதிகம் |
| 5 | வார்டு எண். 19 அண்ணாநகர் பகுதியில் பகிர்மான குழாய்கள் அமைத்தல் | 3.80 | ஆர். பழனி<br>எம். கென்னடி | 0.58 %குறைவு<br>1.45 %அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **301, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 6)**

கொடைக்கானல் நகராட்சியின் 1 முதல் 24 வார்டு வரை உள்ள குடிநீர் விநியோகம் சி.ஐ. மற்றும் ஜி.ஐ. குழாய்கள் மூலம் சீரான முறையில் வழஙகப்பட்டு வருகிறது. இந்த விநியோக குழாய்களில் அடிக்கடி குழாய் உடைப்பு ஏற்பட்டு நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே, வார்டு எண். 1 முதல் 24 வரை உள்ள குழாய் உடைப்புகள், குடிநீர் கசிவுகள் மற்றும் வால்வுகளை உடனுக்குடன் சரி செய்திடும் பொருட்டு பராமரிப்பு பணிகள் குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **302, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 7)**

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் உள்ள சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொது கழிப்பறைகளை அதிகளவில் சுற்றுலா பயணிகள் பயன்படுத்தும் 9 பொது கழிப்பறைகளில் incierator அமைத்திட வேண்டியுள்ளது. அதனடிப்படையில் 9 பொது கழிப்பறைகளில் incierator அமைத்திட பொது நிதியின் மூலம் மதிப்பீடு ரூ.19.80 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **303, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 8)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கில் சுவஜ் பாரத் மிஷன் 2015ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள தகர மேற்கூரையானது துருப்பிடிக்கும் நிலையில் மாசதடைந்துள்ளது. 21.12.2022 மற்றும் 22.12.2022 ஆகிய தேதிகளில் மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக செயற்பொறியாளரின் ஆய்வின்போது மேற்கூரையினை வர்ணம் பூசி பராமரித்திடவும், குப்பை கிடங்கில் மழைநீர் வாய்க்கால் அமைத்திடவும் அறிவுறுத்தியுள்ளார். அதனடிப்படையில் நகராட்சி குப்பை கிடங்கில் உள்ள மேற்கூரையினை வர்ணம் பூசிடவும், குப்பை கிடங்கு பகுதியில் மழை நீர் வாய்க்கால் அமைத்திடவும் பொது நிதியின் மூலம் மதிப்பீடு ரூ. 19.80 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **304, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் – 9)**

கொடைக்கானல் நகராட்சியின் பொது சுகாதார பணியில் பயன்படுத்தப்படும் தள்ளுவண்டிகள் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனால் தெருக்களில் உள்ள குப்பைகளை சேகரிப்பதில் சிரமம் ஏற்படுவதுடன், குப்பைகள் தேக்கமடைகிறது. எனவே, பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்படும் பழுதடைந்துள்ள தள்ளுவண்டிகளின் பழுதுகளை சரி செய்வதற்கு பொது நிதியின் மூலம் ரூ. 5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **305, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 10)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான அப்சர்வேட்டரி நகராட்சி துவக்கப் பள்ளிக்கு என்று விளையாட்டு மைதானம் ஏதும் இல்லை . இப்பள்ளிக்கு அருகில் சுமார் 400 மீட்டர் தூரத்தில் அப்சர்வேட்டரி விநாயகர் கோயில் அருகில் நகராட்சிக்கு சொந்தமான காலியிடம் அமைந்துள்ளது. இந்த இடத்தில் அப்சர்வேட்டரி நகராட்சி துவக்கப் பள்ளிக்கென்று கைப்பந்து மைதான மாற்றிடவும், அமைய உள்ள விளையாட்டு மைதானத்திற்கு தேவையான சிமிண்ட் மேடைகள், மின் விளக்குகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாஙகிக் கொள்ள கல்வி நிதியின் மூலம் மதிப்பீடு ரூ. 19.85 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **306, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 11)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான லாஸ்காட் சாலையில் அமைந்துள்ள கிறிஸ்துவ மயானத்தின் நடைபாதை மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் மயானத்தினை பயன்படுத்தும் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, இந்து மயானத்தின் நடைபாதை, நடைபாதை மின்விளக்குகள், காத்திருப்போர் அறை பழுது மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்திட பொது நிதியின் மூலம் ரூ.20.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு **நிர்வாக அனுமதி பெற அனுமதி** வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **307, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 12)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான லாஸ்காட் சாலையில் அமைந்துள்ள இந்து மயானத்தின் நடைபாதை மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் மயானத்தினை பயன்படுத்தும் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, இந்து மயானத்தின் நடைபாதை, நடைபாதை மின்விளக்குகள், காத்திருப்போர் அறை பழுது மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்திட பொது நிதியின் மூலம் ரூ.20.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **308, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 13)**

கொடைக்கானல் நகர் பகுதியில் கடந்த காலஙகளில் பெய்த கனமழை மற்றும் டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட மாண்டஸ் புயல் காரணமாக சாலைகள் ஆஙகாஙகே மழை நீரினால் சேதமடைந்துள்ளது. இதனால் இந்நகருக்கு சுற்றுலா வரும் சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி பொது மக்களும் சிரமமடைகின்றனர். எனவே, வார்டு எண் 1 முதல் 12 வரை உள்ள சாலைகளில் ஏற்பட்டுள்ள சேதஙகள் மற்றும் குண்டு குழிகளில் பேட்ஜ் ஒர்க் செய்வதற்கு பொது நிதியின் மூலம் ரூ.5.00 இலட்சத்திற்கு **(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)** மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **309, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 14)**

கொடைக்கானல் நகர் பகுதியில் கடந்த காலஙகளில் பெய்த கனமழை மற்றும் டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட மாண்டஸ் புயல் காரணமாக சாலைகள் ஆஙகாஙகே மழை நீரினால் சேதமடைந்துள்ளது. இதனால் இந்நகருக்கு சுற்றுலா வரும் சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி பொது மக்களும் சிரமமடைகின்றனர். எனவே, வார்டு எண் 13 முதல் 24 வரை உள்ள சாலைகளில் ஏற்பட்டுள்ள சேதஙகள் மற்றும் குண்டு குழிகளில் பேட்ஜ் ஒர்க் செய்வதற்கு பொது நிதியின் மூலம் ரூ.5.00 இலட்சத்திற்கு **(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)** மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **310, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 15)**

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் மற்றும் பொது பயன்பாட்டில் உள்ள ஆழ்துளை கிணறு மின் மோட்டார்களில் அடிக்கடி ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திட வேண்டியுள்ளது. மேலும், நகராட்சி பகுதியில் மின் மோட்டர்கள், ஜிம்கானா, ஊேறாட்டல் ஜெய், உகார்த்தே நகர், அய்யர் கிணறு, கே.பி.எம்.பாறை, தைக்கால் ஆகிய பகுதியில் மின் மோட்டார் மூலம் குடிநீர் வழஙகப்பட்டு வருகிறது. எனவே, பொதுமக்களின் குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு உடனுக்குடன் பழுதுகளை சரி செய்திட வேண்டியுள்ளதால் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு குடிநீர் நிதியின் மூலம் ரூ. 5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **311, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 16)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கீழ்குண்டாறு அனையிலிருந்து நீர் எடுக்கப்பட்டு கோடை கொச்சின் சாலையில் அமைந்தள்ள ரிச் பாய்ண்டில் உள்ள நீர் தேக்க தொட்டியின் மூலம் சேகரிக்கப்பட்டு தடுப்பணை வாயிலாக சுத்திகரிக்கப்பட்டு நகரின் அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

எனவே, கீழ்குண்டாறு அணையில் மோட்டார் இயக்கிடவும், அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும் ரிச் பாய்ண்டில் ஸ்கேடார் இயக்க போதிய தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும், போதிய தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தொழில் நுட்ப பணியாளர்கள் வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து அனுமதி பெறும் வரை கீழ்குண்டாறு பகுதியில் ஏற்கனவே பணிபுரிந்த நபர்ளை கொண்டு பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தினை குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ. 15.00 இலட்சமாகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **312, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 17)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 17, தந்திமேடு பகுதியில் சாலைகள் மிகவும் சேதமடைந்துள்ளது. இதனால் இப்பகுதியில் வசித்து வரும் சுமார் 50 க்கும் மேற்கண்ட குடும்பஙகள், பள்ளி மாணவ, மாணவிகள் மிகவும் சிரமடைந்து வருகின்றனர். எனவே, தந்திமேடு பிரதான சாலையில் சிமிண்ட் சாலை அமைத்திட பொது நிதியின் மூலம் மதிப்பீடு ரூ. 14.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **313, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 18)**

கொடைக்கானல் நகராட்சி அலுவலகத்தின் மேற்புறம் அலுவலகத்தில் இருந்து நகர்மன்ற கூடத்திற்கு செல்லும் நடைபாதையின் மேற்கூரை இல்லாத காரணத்தினால், மழைக்காலங்களில் நனைந்தபடியே செல்லவேண்டியுள்ளது. மேலும் இதனால் நகர்மன்ற உறுப்பினர்கள் மட்டும் அன்றி பொதுமக்களும் சிரமப்படுகின்றனர். எனவே, நகராட்சி அலுவலகம் முதல் நகர்மன்ற கூடம் வரை நடைபாதையின் மேற்புறம் மேற்கூரை அமைத்திட பொது நிதியின் மூலம் ரூ. 10.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **314, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 19)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீர்த்தேக்கத்தில் அமைந்துள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் நீண்ட வருடங்களாக பயன்பாடின்றி இருந்து வந்தது. தற்போது 15–வது நிதிக்குழு பரிந்துரை நிதியின் மூலம் பழுதுகள் சரி செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் போதுமான தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் இந்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. தொழில் நுட்ப பணியாளர்கள் வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து அனுமதி பெறும் வரை இரண்டு தொழில்நுட்ப பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் தரவிலை அட்டவணையின்படி தற்காலிகமாக ஒப்பந்ததாரர் மூலம் முற்றிலும் தற்காலிகமாக பணியமர்த்திக் கொள்ளவும், அதற்கான செலவினத்தினை ஒப்பந்ததாரருக்கு குடிநீர் நிதியின் மூலம் வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 5.00 இலட்சம் ஆகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **315, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 20)**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்: 35945/2022/EA2–SWM–6, நாள்:10/01/2023–ன்படி வெளிக் கொணர்வு மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள 3 ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரிட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தேவையான தூய்மை பணியாளர்கள் அமர்த்திடவும்,இந்நகராட்சியில் நல்ல நிலையில் உள்ள வாகனங்கள் நாள் வாடகைக்கு மேற்படி ஒப்பந்ததாரரிடம் வழங்கிடவும் மீதம் தேவையான வாகனங்கள் ஒப்பந்ததாரரே அமர்த்தி கொள்ள வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

நாள் ஒன்றுக்கு சேகரமாகும் திடக்கழிவுகளை வெளிக்கொணர்வு முறையில் செயலாக்கம் செய்திட நிர்வாக அனுமதி கீழ்கண்டுள்ளவாறு வழங்கப்பட்டுள்ளது.

| நகராட்சியின் பெயர் | நாள் ஒன்றுக்கு உருவாகும் குப்பைகளின் அளவு (TPD) | ஒரு டன் திடக்கழிவை செயலாக்கம் செய்ய ஆகும் விலை ரூ | நாள் ஒன்றுக்கு உத்தேச விலை (ரூபாய் இலட்சத்தில்) | ஒரு வருடத்திற்கு உத்தேச விலை (ரூபாய் இலட்சத்தில் | அனுமதிக் கப்பட்ட GST 18% and LWF 1% (ரூபாய் இலட்சத்தில்) | ஒரு வருடத்திற்கு உத்தேச விலை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| கொடைக்கானல் | **18.67** | **5,029.94** | **0.94** | **343.10** | **65.18** | **408.28** |

மேலும், நகராட்சி வாகனங்களை வாடகை அடிப்படையில் தனியார் ஒப்பந்த்தாரரிடம் வழங்கிடவும் நாளொன்றுக்கான வாடகை நிர்ணயம் செய்தும், அதனை மாதாந்திர பட்டியலில் பிடித்தம் செய்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வாகனத்தின் வகை | தற்போது நகராட்சியில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை | நகராட்சியின் பயன்பாட்டிற்கு போக மீதமுள்ள வாகனங்களின் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு வாடகைத் தொகை ரூ | நாள் ஒன்றுக்கு வசூல் செய்ய வேண்டிய வாடகைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | Push Cart | 24 | 24 | 10 | 240 |
| 2 | LCV | 10 | 1 | 200 | 200 |
| 3 | HCV | 5 | 5 | 400 | 2000 |
| | மொத்தம் | 39 | 30 | | 2440 |

மேலும், தற்போது நகராட்சியில் பணிபுரிந்து வரும் நிரந்தர தூய்மை பணியாளர்கள் பணிகளின் விபரம் கீழ்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிரந்தர தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை | வாகனத்தின் வகை | இலகுரக வாகனம் |
|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் | 6 | LCV | 1 |
| 2 | தினசரி / வாரச்சந்தை | 34 | LCV | 7 |
| 3 | சாலையோரம் உள்ள புதர்களை அகற்றுதல் | 3 | LCV | 1 |
| 4 | சாலையோரம் உள்ள மண் புழுதிகளை அகற்றுதல் | 1 | | |
| 5 | வாய்க்கால் பணி | 11 | | |
| | மொத்தம் | 55 | | 9 |

மேலும், வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள வேண்டிய திடக்கழிவு மேலாண்மை பணிகளின் விபரம்.

| வ. எண் | பணியின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வீடுகள் தோறும் மக்கும் குப்பை எனவும், மக்காத குப்பை எனவும் தரம் பிரித்து PUSH CART வாகனத்தில் வாங்கிடுவது | 6026 வீடுகள் |
| 2 | வீடுகள் தோறும் மக்கும் குப்பை எனவும், மக்காத குப்பை எனவும் தரம் பிரித்து LCV வாகனத்தில் வாங்கிடுவது | 4018 வீடுகள் |
| 3 | வணிக நிறுவனங்களில் மக்கும் குப்பை எனவும் மக்காத குப்பை எனவும் தரம் பிரித்து LCV வாகனத்தில் வாங்கிடுவது | 1295 வணிக நிறுவனங்கள் |
| 4 | வணிக நிறுவனங்களில் மக்கும் குப்பை எனவும் மக்காத | 864 வணிக |

| | | |
|---|---|---|
| | குப்பை எனவும் தரம் பிரித்து HCV வாகனத்தில் வாங்கிடுவது | நிறுவனங்கள் |
| 5 | பேருந்துகள் செல்லும் முக்கிய சாலையின் வழிதடங்கள் பெருக்குதல் , குப்பைகள் அகற்றுதல் செயலாக்கம் செய்தல் | 22.18 கிலோ மீட்டர் |
| 6 | பேருந்துகளுக்காக செல்லும் தெருக்களை தினந்தோறும் பெருக்குதல், குப்பைகள் அகற்றுதல், செயலாக்கம் செய்தல் | 1.69 கிலோ மீட்டர் |

மேற்கண்டவாறு நகராட்சி நிர்வாக இயக்குநரக செயல்முறைகள், வழிகாட்டுதல்களின்படியும், Tamilnadu Transparancy in Tender Act 1998 and Rules 2000ன்படி தனியார் சேவை வழங்குபவர் / முகமை / ஒப்பந்த்தார்ர் மூலம் பணிகள் மேற்கொள்ளவும், இப்பணிகளுக்கு மூன்று வருடங்களுக்கு ஆகும் செலவினங்களையும் மற்றும் தனியார் நிறுவன சேவை கட்டணம் போன்ற இது தொடர்பான இதர செலவினங்களுக்கும் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும், பொது நிதியில் பற்றாக்குறை இருந்தால் SWM TIED GRANT UNDER 15$^{th}$ CFC நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.058/2023/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **316, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 21)**

மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் அவர்களின் 12.12.2022–ம் தேதிய கோப்பு ஒப்புதல்படி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நகர்புற உள்ளாட்சிகளுக்கு (மாநகராட்சி, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள்) ஒருங்கிணைந்த மின்னணு தொடுதிரை குறைதீர்க்கும் பிரிவு ஏற்படுத்தவும், அப்பிரிவிற்கு தேவையான கட்டமைப்பு, மின்கட்டணம், பணியாளர்கள் போன்ற முதலீடு மற்றும் பராமரிப்பு முதலான அனைத்து பணிகளுக்கும் ஆண்டிற்கு ஏற்படும் மொத்த செலவினம் ரூ.13.00 இலட்சத்தில், மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் 1/3 பங்கு தொகையினை உள்ளாட்சி அமைப்புகள் வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்காணும் நகர்புற உள்ளாட்சிகளின் ஒருங்கிணைந்த குறைதீர் பிரிவிற்கான ஆண்டு செலவினமாக இந்நகராட்சியின் பங்களிப்பு தொகை ரூ.1,33,500/– ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து ஐநூறு மட்டும்) செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.9211/2022/இ4, நாள்.12.12.2022–ன்படி செலவீனத் தொகை வழங்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **317, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 22)**

கொடைக்கானல் நகரம் சீனிவாசபுரம், AITTUC நகரில் குடியிருக்கும் திரு.ஜே.கிளமன்ட் ராஜா என்பவர் தனக்கு சொந்தமான இடத்தில் கடை அமைத்து தொழில் செய்து வருவதை, புகார்களின் அடிப்படையில் (1) ஆணையாளர், கொடைக்கானல் நகராட்சி, (2) வட்டாட்சியர், கொடைக்கானல் (3) வருவாய் கோட்டாட்சியர், கொடைக்கானல் ஆகியோர் எவ்வித இடைஞ்சலோ, கடையை அகற்றவோ கூடாது என்று நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பிறக்க கொடைக்கானல் நீதிமன்றத்தில் வழக்கு ஓ.எஸ்.எண்.39 of 2020 மூலம் வழக்கு தொடர்ந்து அவ்வழக்கில் ஆணையாளரை முதல் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கானது இந்நகராட்சி உள்ளூர் நிலை வழக்கறிஞர் திரு.ஜி.சரவணக்குமார் அவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. வழக்கறிஞரின் 15.12.2022ம் தேதிய கடிதத்தில் வழக்கிற்கான வழக்கு கட்டணம் ரூ.7420/– வழங்க கோரி தெரிவித்துள்ளார்.

மேற்காணும் தொகையை வழக்கறிஞருக்கு நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். (கோப்பு எண்.58/2021/எப்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **318, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 23)**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நாய்கள் பிடிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண்.TN 57 AU 7822 (TATA ACE HT) கடந்த 2013ம் ஆண்டு வாங்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட வாகனத்தின் அனைத்து பழுது நீக்க பணிகளையும் மேற்கொள்வதற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்வதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.071/2023/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **319, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 24)**

கொடைக்கானல் நகராட்சி – பொது சுகாதார பிரிவு இந்நகராட்சி பகுதிகளில் உள்ள 24 வார்டுகளில் இருந்து சேகரமாகும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் சீராடும் கானல் உரக்கிடங்கில் உள்ள இயந்திரம் மூலம் செயலாக்கம் செய்யப்பட்டு உரம் தயாரிக்கும் பணிகள் செய்ய பயன்படுத்தப்படும் இயந்திரத்தில் உள்ள Feeding conveyor Belt, Insteceion Tubie conveyor, RDF conveyor Belt, Processing conveyor Belt, Composting conveyor Belt போன்ற பகுதிகள் சேதமடைந்து பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் உள்ளதால், உரம் தயாரிக்கும் பணிகளில் தொய்வு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. மேற்படி பழுதுகளை நீக்கம் செய்ய உத்தேச செலவுத் தொகை ரூ.12,00,000/– (ரூபாய் பன்னிரெண்டு இலட்சம்) ஆகும். மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேசத் செலவுத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர்மன்ற அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.069/2023/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **320, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் – 25)**

கொடைக்கானல் நகராட்சி – பொது சுகாதாரம் நகராட்சிக்குட்பட்ட 24 வார்டு பகுதிகள் தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கத்தின் கீழ் வருகின்ற பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 07.01.2023 முதல் 14.01.2023 வரை உள்ள எட்டு தினங்களுக்கு அனைத்து குடியிருப்புகளிலும் போகி பண்டிகையை முன்னிட்டு தங்களின் வீடுகளில் இருந்து வெளியேற்றப்படும் தேவையற்ற திடக்கழிவுகளை எரிக்காமல் நகராட்சி மூலம் புகையில்லா போகி என்ற தலைப்பில் திடக்கழிவுகளை சேகரிக்க சேகரிப்பு மையங்கள் மூலம் நகராட்சி பணியாளர்களை கொண்டு சேகரிக்கவும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலகத்தில் இருந்து கடிதம் எண்.9514/2023/SWM, நாள்.04.01.2023 மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் தேவையில்லாத திடக்கழிவுகளை எரித்து காற்று மாசு ஏற்படாமல் கட்டுப்படுத்த அரசு உத்தரவுகளின்படி புகையில்லா போகியினை கடைபிடிக்கவும், பொது மக்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்த வாகனம் மூலம் ஒலிபெருக்கி வைத்து விழிப்புணர்வு ஏற்படுத்த (Public Address System) நாள் ஒன்றுக்கு ரூ.3,500/– வீதம் 07.01.2023 முதல் 14.01.2023 வரை எட்டு நாட்களுக்கு விழிப்புணர்வு வாகனம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.28,000/– (ரூபாய் இருபத்தெட்டாயிரம் மட்டும்) ஆகும். மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளவும், அதற்காகுத் செலவுத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர்மன்ற அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.070/2023/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **321, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் – 26)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப் பணிகள் திடக்கழிவு மேலாண்மை செயலாக்கப்பணி (Secondary Collection) பணிக்காக தேவையான Bin கள் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. ஆகவே பொது சுகாதார பணிகள் மேற்கொள்வதற்கு பொது சுகாதாரம் நலன்கருதியும் 200 லிட்டர் கொள்ளளவு உள்ள Bin கள் (பச்சை மற்றும் ஊதா நிறத்தல்) 30 எண்ணம் பச்சை கலர் மற்றும் 30 எண்ணம் ஊதா கலர் மொத்தம் 60 எண்ணம் வாங்கிக் கொள்வதற்கும் அதற்கான உத்தேச செலவினங்கள் ரூ.1,80,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து என்பதாயிரம் மட்டும்) மேற்கண்ட 60 எண்ணம் Bin கள் வாங்கிக் கொள்வதற்கு விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அதற்கான உத்தேச செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது மக்களின் நலன் கருதியும் பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதியும் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.39/2023/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **322, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் – 27)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப் பணிகள் குறித்து பொது மக்களின் நலன் கருதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9514/2023/SBM, நாள். 04.01.2023ம் தேதிய உத்தரவின்படி, கொடைக்கானல் நகராட்சி பகுதியில் புகையில்லாத போகி என்ற விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு 07.01.2023 முதல் 14.01.2023ம் தேதி வரை வீடு வீடாக சென்று பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திட இப்பணிகள் செயல்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உத்தரவின்படி பொது மக்களிடம் பழைய திடக்கழிவுகளை எரிக்காதவாறு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு 4 x 6 அளவு 13 எண்ணம் கொண்ட பதாகைகளும் 5000 எண்ணிக்கையில் துண்டு பிரசுரங்கள் (Bit Notice) தனித்தனியே அச்சடித்து வாங்கிக் கொள்வதற்கும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.23500/– (ரூபாய இருபத்தி மூன்றாயிரத்து ஐநூறு மட்டும்) க்கும் மேற்கண்ட செலவினங்களை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது மக்களின் நலன் கருதியும் பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதியும் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.40/2023/எச்.1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **323, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 28)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரம் நகராட்சிக்கு உட்பட்ட 24 வார்டு பகுதிகளில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள் மற்றும் பள்ளிவளாகம் சுத்தம் செய்யும் பணிக்கு வெளிக்கொணர்வு முறையில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்கு உட்பட்ட நான்கு அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் கழிவறை மற்றும் பள்ளி சுத்தம் செய்யும் பணியினை தற்போது திரு.P.சுரேஷ்குமார் என்ற ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு நகர்மன்ற அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மேற்கண்ட ஒப்பந்ததாரர் பணி உத்தரவு காலம் டிசம்பர்–2022 உடன் முடிவடைகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலகத்திலிருந்து தமிழ்நாடு முழுவதும் ஒரே அளவுகோலில் பணியாளர்களை பணியமர்த்த திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளதால், பொது சுகாதார அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும், பள்ளி குழந்தைகளின் சுகாதார நலன் கருத்தில் கொண்டும் ஏற்கனவே இப்பணியினை மேற்கொள்ளும் அதே ஒப்பந்ததாரருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அதே விலை விகிதத்தில் 01.01.2023 முதல் 31.03.2023 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து திரு.P.சுரேஷ்குமார், மதுரை என்ற ஒப்பந்ததாரருக்கு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குவதற்கும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப் பணிகளில் கழிப்பறை பராமரிப்பு மற்றும் பள்ளி குழந்தைகளின் நலன் கருதியும் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **324, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 29)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளான வீடு மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் குப்பைகளை தரம் பிரித்து (மக்கும் குப்பை மக்காத குப்பைகளை) உரக்கிடங்கிற்கு எடுத்துச் சென்று கையாளும் பணி நடைபெற்று வருவதாகவும், இப்பணிகளை மேலும், திறம்பட மேற்கொண்டு நகரின் தூய்மையினை தொடர்ந்து பராமரிக்க பொது மக்களின் வீடுதோறும் நகராட்சி பணியாளர்களை கொண்டு (Push Cart) தள்ளுவண்டி மூலம் வாங்கப்பட்டு வருகிறது. அதற்கு பயன்படுத்தப்படும் நீல நிறம் மற்றும் பச்சை நிறம் குப்பை கூடைகள் சேதமடைந்து பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் உள்ளதால் (80லிட்டர் கொள்ளளவு கொண்ட) நீல நிறம் கூடைகள் 75 எண்ணம் மற்றும் பச்சை நிறம் கூடைகள் 75 எண்ணம் புதியதாக வாங்கி வழங்க வேண்டி துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு அளித்துள்ளார்கள். எனவே, மேற்கண்ட இரண்டு வகையான குப்பை கூடைகள் வாங்கிக் கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவித் தொகை ரூ.3,00,000/– யை (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | குப்பை கூடைகள் தேவைப்படும் இடங்களின் விபரங்கள் | குப்பை தொட்டிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 24 தள்ளுவண்டி | (4/தள்ளுவண்டி) 96 |
| 2 | பேருந்து நிலையம் | 10 |
| 3 | ஏரிச்சாலை பகுதி | 20 |
| 4 | வெள்ளி நீர்வீழ்ச்சி பகுதி | 10 |
| 5 | கோக்கர்ஸ்வாக் பகுதி | 14 |
| | மொத்தம் எண்ணிக்கை | 150 |

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொது மக்களின் நலன் கருதியும் பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதியும் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொண்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.38/2023/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **325, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 30)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீர்த்தேக்கத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையமான கட்டப்பட்டு 35 வருடஙகளுக்கு மேலாகிறது. இக்கட்டிடம் பராமரிப்பு பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படாததால், ஏற்கனவே உள் கட்டிடத்தின் மேற்கூரை பழுதாகி மழைக்காலஙகளில் மழை நீர் சுவற்றில் இறஙகி சேதமடைந்துள்ளது. மேலும், இதில் உள்ள வடிகட்டி படுக்கைகளில் உள்ள Filter Medium சேதம் ஏற்பட்டு அதன் வடிகட்டு தன்மை இழந்து நீரினை வடிக்காமல் காலதாமம் ஏற்படுவதால் Filter Medium யை முற்றிலுமாக மாற்றி வேறு வெவ்வேறு கற்கள், மணல், பைப் லைன் மாற்றி பணி செய்வதற்கு **கள ஆய்வின்போது உயர் அலுவலர்கள் ஆய்வின் போது** அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நகர் பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழஙகுவதற்கு ஏதுவாக குடிநீர் நிதியின் மூலம் மதிப்பீடு ரூ. 19,98,306/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **326, நாள். 30.01.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 31)**

கொடைக்கானல் நகராட்சி வார்டு எண். 18 ல் காமராசர் சாலையில் இருந்து லாஸ்காட் சாலையினை இணைக்கும் படிக்கட்டுகள் சேதமடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் ஆபத்தான சூழ்நிலையில் உள்ளது. இதனால் வயதானவர்கள் இச்சாலையினை பயன்படுத்திட இயலாத நிலையில் உள்ளது. இச்சாலையிலேயே மின்சார வாரிய அலுவலகம்,தனியார் மருத்துவமனைகள், மருந்தகங்கள், சர்ச், ஆர்.சி.பள்ளி வளாகம், பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பள்ளிவாசல் அமைந்துள்ளது. இப்படிக்கட்டு சாலையினை தினசரி அதிகப்படியான பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான இப்படிக்கட்டினை சீரமைத்து, பாதுகாப்பு ( கைபிடிகள் ) வேலியுடன் அமைத்திட வேண்டியுள்ளது. மேலும், பள்ளிவாசல் முன் உள்ள கழிவு நீர் வாய்க்கால் மேல் மூடி இல்லாமல் விபத்து ஏற்படும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணிகளை அவசர அவசியமாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், பொது நிதியின் கீழ் மதிப்பீடு ரூ. 9.40 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | 327, நாள். 30.01.2023 |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் – 32)**

கொடைக்கானல் நகராட்சி வார்டு எண். 18 ஆனந்தகிரி 3 வது தெருவில் கழிவு நீர் வாய்க்கால் இல்லாத காரணத்தினால் கழிவுநீர் சாலையில் செல்கிறது. இதனால் இப்பகுதியில் குடியிருப்போர்களுக்கு தொற்று நோய் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, ஆனந்தகிரி 3வது தெருவில் கழிவுநீர் வாய்க்கால் அமைப்பதற்கு பொது நிதியின் கீழ் மதிப்பீடு ரூ.4.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | 328, நாள். 30.01.2023 |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–பா.செல்லத்துரை
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.